**அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியம் - 2021**

---

அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியத்தின் 2021 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 2009 இன் 44 ஆம் இலக்க அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியச் சட்டத்தின் 10(4) பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்தம் மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும். அச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக் கூற்றுக்கள், விதிகள் மூலம் குறிப்பிடக்கூடிய வகையில் காலப்பகுதியில் அந் நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்திற்கு தயாரித்தல் இடம்பெறுவதாக உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டும். எவ்வாறாயினும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 877 (2) (ஈ) உறுப்புரை மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2021 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கை திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 கணக்காய்விற்காக முறையான தகவல்கள் பெற்றுக் கொள்வதற்கு முடியாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அம்புலுவாவ வளாகத்தினுள் அலுவலகமொன்று நடத்திச் செல்லப்பட்டிருந்த போதிலும் பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் முறையாக பேணிச் செல்லப்பட்டிராததுடன் அதற்காக அதிகாரமளிக்கப்பட்ட பொறுப்புக் கூறப்பட வேண்டிய உத்தியோகத்தரொருவர் அலுவலக கடமையில் ஈடுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பொறுப்பு சபையினை பிரநிதித்துவப்படுத்தும் எந்தவொரு அங்கத்தரொருவரும் கணக்காய்விற்கு தகவல்கள் பெற்றுக் கொடுப்பதற்காக முன்வராததுடன், அதிகாரமளித்த கடிதம் அல்லது நியமனக் கடிதம் பெற்றுக் கொடுக்கப்படாத நிர்மாணிப்பு மதியுரையாளர், முகாமையாளர் மற்றும் கணக்கீட்டு உதவியாளர் கணக்காய்விற்கு தகவல் சமர்ப்பித்தனர். இதனால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக சரியான, தெளிவான மற்றும் முழுமையான தகவல்கள் கணக்காய்விற்கு பெற்றக் கொள்வதற்கு முடியாது போனது. | பதில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. | • அதிகாரமளிக்கப்பட்ட பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தரொருவர் அலுவலக கடமையில் ஈடுப்படுத்தப்படல் வேண்டும்.<br>• புத்தகங்கள் முறையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2.2 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தின் பெயரில் கம்பளை இலங்கை வங்கி கிளையில் பேணிச் செல்லப்படுகின்ற ரூபா 4,000,000 பெறுமதியான 03 நிலையான வைப்புகளுக்குரிய நிலையான வைப்பு சான்றிதழ்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை | நிலையான வைப்புச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மத்திய அரசு மற்றும் மத்திய மாகாண சபையின் செலவில் அம்புலுவாவ வளாகத்தில் மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்தி செயற்திட்டமொன்று மற்றும் குளம் புனரமைத்தல் மற்றும் நடைப்பாதைகள் நிர்மாணிக்கும் இரு செயற்திட்டங்கள் தொடர்பில் கிரய மதிப்பீடு, செலவினம் அல்லது வேறு எந்தவொரு விபரமும் பொறுப்பு நிதியத்திடம் காணப்படவில்லை. இதனால் அவ் அபிவிருத்தி செயற்திட்டம் சொத்தாக அடையாளப்படுத்தி கணக்கிடப்படுவதற்கு முடியாதிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை | அபிவிருத்தி செயற்திட்டம் சொத்துக்களாக அடையாளப்படுத்தி கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் சனவரி தொடக்கம் ஏப்ரல் வரை வழங்கப்பட்ட நுழைவுச் சீட்டுக்களின் அடிக்கட்டு பிரதிகள் தீ வைத்து அழிக்கப்பட்டிருந்தது. அதனால் அக் காலத்திற்குரியதாக நுழைவுச் சீட்டுகள் விற்பனையினால் பெறப்பட்ட வருமானம் திருப்திகரமாக கண்காணிக்க மற்றும் உறுதி செய்வதற்கு இயலவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை | பதிவேட்டுகளின் மற்றும் புத்தகங்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | முறையான டெண்டர் நடைமுறையொன்று பின்பற்றப்படாது பொறுப்பு நிதியத்திற்கு சொந்தமான வாகனமொன்று ரூபா 3,500,000 இற்கு வெளிநபரொருவருக்கு விற்கப்பட்டிருந்ததுடன் அதற்குரிய பதிவேடுகள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை | • முறையான டெண்டர் நடைமுறை பின்பற்றப்பட்டு விற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.<br>• விற்பனைக்குரிய அனைத்து தகவல்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (உ) | நிதியத்திற்கு சொந்தமாக ரூபா 9,130,000 ஆன டொயோடா வகையின் வாகனம் மற்றும் மின்சாரத்தினால் செயற்படும் மோட்டார் சைக்கிள் பௌதீகமாக காணப்படுகின்றமை மற்றும் நிதியத்தின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டமை உறுதி செய்வதற்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. எவ்வாறெனினும் மோட்டார் வாகனத்திற்காக மீளாய்வாண்டினுள் பழுதுபார்த்தலுக்காக ரூபா 608,089 செலுத்தப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை | பௌதீகமாக வாகனங்கள் காணப்படுகின்றமை மற்றும் நிதியத்தின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டமை உறுதி செய்யும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | அம்புலுவாவ நிதியத்தின் பெயரில் பொது பொறுப்புரிமையரின் கீழ் காணப்படுகின்ற அனைத்து பணம் மற்றும் அம்புலுவாவ வளாக அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு பொறுப்பு நிதியம் பெயரில் வங்கிகளில் காணப்படும் தொகை தொடர்பான தகவல்கள் மற்றும் பதிவேடுகள் பொறுப்பின் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை | நிதியத்தின் பெயரில் பொது பொறுப்புரிமையரின் கீழ் காணப்படுகின்ற அனைத்து பணம் மற்றும் அம்புலுவாவ வளாக அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு பொறுப்பு நிதியம் பெயரில் வங்கிகளில் காணப்படும் தொகை தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (எ) | சில்லறை காசு மீள்நிரப்பும் 03 சந்தர்ப்பங்களின் போது உறுதிச்சீட்டுக்களின் பெறுமதி மிகைத்து கூட்டுத்தொகை ரூபா 29,100 மற்றும் 8 சந்தர்ப்பங்களின் போது உறுதிச்சீட்டுக்கள் இன்றி பதவியணியின் மூவருக்கு ரூபா 260,000 செலுத்தப்பட்டிருந்தது. அதில் 02 சந்தர்ப்பங்களின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட மொத்தம் ரூபா 55,000 ஆன தொகை கொடுப்பனவு செய்தலுக்குரிய பெறுநர் தொடர்பாக தகவல்கள் உறுதி செய்யப்படவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை | சில்லறை காசு மீள்நிரப்புவதற்கு தொடர்புடையதாக உறுதிச் சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் அக் கொடுப்பனவுகளின் பெறுநர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (ஆ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழிய சேமலாப நிதியச் சட்டம் மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டம் | ஊழியர்கள் 13 தொடக்கம் 18 இடையேயான எண்ணிக்கை தொடர்பில் ஊழிய சேமலாப நிதியச் சட்டம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்குரிய பங்களிப்பு தொகை மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை | ஊழிய சேமலாப நிதியச் சட்டம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் | | | |
| i | நிதி பிரமாணம் 137, 138, 237 மற்றும் 257 | அதிகாரமளித்தல், கொடுப்பனவு அங்கீகரித்தல் மற்றும் அத்தாட்சிப்படுத்தல் செய்யப்படாத 231 வவுசர்களுக்காக ரூபா 35,932,655 செலுத்தப்பட்டிருந்தது. இந்த கொடுப்பனவுகளில் ரூபா 2,743,460 ஆன கொடுப்பனவிற்காக இருப்பு உறுதிப்படுத்தல்களும் சமர்ப்பிக்கப்படவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை | நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| ii. | நிதி பிரமாணம் 264 | மீளாய்வாண்டின் 156 பற்றுச்சீட்டுக்கள் ஊடாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 26,548,673 தொடர்பாக பணம் பெறப்பட்டமைக்கு ரசீதுகள் பெறுநரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்-டிருக்கவில்லை | கொடுப்பனவுகளுக்குரிய ரசீதுகள் பெறப்படல் வேண்டும். |
| (இ) | 2006 அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் 3.2 ஆம் பந்தி | மீளாய்வாண்டில் பெறுகை செயன்முறைக்கு விலகி 4 சந்தர்ப்பங்களில் ரூபா 359,561 ஆன தொகைக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்-டிருக்கவில்லை | அரச பெறுகை வழிக்காட்டி கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.4 நிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி பிரமாணம் 387 ஏற்பாடுகள் பின்பற்றப்படாது மீளாய்வாண்டினுள் வங்கி மேலதிக பற்று வசதி பெற்றுக்கொண்டு ரூபா 112,621 ஆன வட்டி செலுத்தப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் வழங்குனரொருவருக்கு கொடுப்பனவு செய்யும் போது விலைமனுக்கள் சமர்ப்பித்த நிறுவனங்களுக்கு பதிலாக நபரொருவரின் பெயருக்கு 08 சந்தர்ப்பங்களின் போது மொத்தம் ரூபா 2,522,932 காசோலைகள் வழங்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | விலைமனுக்கள் சமர்ப்பித்த நிறுவனத்தின் பெயரில் காசோலைகள் வழங்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 காட்சி மோசடிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நுழைவுச்சீட்டுகள் மற்றும் ஏனைய வருமான பெறுவனவுகள் ரூபா 21,466,760 இல் ரூபா 20,834,871 வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. கையிலுள்ள பிடிப்பணத்தில் ரூபா 143,400 ஆன பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதி பற்றாக்குறை தொடர்பாக நிதி பிரமாணம் 156 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஏப்ரல் மாதம் பிரதான நுழைவாயில் உள்வந்த பார்வையாளர்கள் மற்றும் கம்பத்திற்கு உள்வந்த பார்வையாளர்கள் தொடர்பில் மேற்கொண்ட பரிசோதனையின் போது பிரதான நுழைவாயிலில் உள்வந்த எண்ணிக்கையை பார்க்கிலும் அதிகமான எண்ணிக்கை கம்பத்திற்கு உட்சென்றிருந்தனர். இதன் பிரகாரம் நுழைவாயிலில் நுழைவுச் சீட்டு பெற்றுக் கொள்ளப்படாது உள்வந்தமை அவதானிக்கப்பட்டதுடன் தெரிவு பரிசோதனையின் பிரகாரம் அதனால் பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 15,540 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கட்டுப்பாடு மிகவும் வலுப்படுத்தப்பட வேண்டியதுடன் இழக்கப்பட்ட வருமானம் தொடர்பாக நிதி பிரமாணம் 156 பிரகாரம் நடவடிக்கை எடுக்ப்படல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொறுப்பு நிதிய சட்டத்தின் 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களின் விளையாட்டு மற்றும் வினோத நடவடிக்கைகள் தொடர்பான திறனை மேம்படுத்துவதற்காக போதுமான வசதிகள் வழங்கல், விவசாயிகளை தைரியப்படுத்தல் மற்றும் சமூகத்தினுள் இளைஞர் விவசாய அமைப்பொன்றினை தாபித்தல், அம்புலுவாவ மலைகளை சுற்றிய பிரதேசத்தினை மேம்படுத்தல் மற்றும் அறிவுடன் வங்கிகளில் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களில் முதலிடுவதற்கு நபர்கள் ஊக்குவித்தல் போன்ற நோக்கங்களை அடைந்துக் கொள்வதற்கு மீளாய்வாண்டில் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதியத்தின் நோக்கங்களை அடைந்துக் கொள்வதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இந்த வளாகத்திற்குரிய காணிகள் 1998 ஆம் ஆண்டில் அளவிடப்பட்டுள்ளதெனவும், அது 400 ஹேக்கர்களிலான வன சூழலிலானதெனவும் குறிப்பிடப்பட்ட போதிலும் அதற்குரிய அளவீட்டு அறிக்கைகள் பொறுப்பிற்கு பெறப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அளவீட்டு அறிக்கைகள் பொறுப்பு நிதியத்திற்கு விரைவில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | நிதியத்திற்கு சொந்தமான உணவகமொன்று 2020 மே மாதம் தொடக்கம் செப்தெம்பர் மாதம் வரை வெளி நபரொருவருக்கு குத்தகை கூலி அறவிடப்படாது மற்றும் குத்தகை ஒப்பந்தம் இன்றி வியாபார | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | டென்டர் நடைமுறையினை பின்பற்றி முறையான குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் வியாபார நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகளுக்காக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. டென்டர் நடைமுறை பின்பற்றப்படாது வியாபாரம் நடத்திச் செல்லப்பட்டிருந்த அந்த வியாபாரிக்கு மீளாய்வாண்டின் ஒக்தோபர் மாதம் தொடக்கம் மாதாந்தம் ரூபா 10,000 குத்தகை தொகைக்கு ஒப்பந்தக் காலம் குறிப்பிடப்படாது 2022 சனவரி 05 ஆந் திகதி உடன்பட்டு குத்தகை அடிப்படையில் அவ் உணவக வியாபார நடவடிக்கைகளுக்காக பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. | | கையளிக்கப்பட்டு குத்தகை கூலி அறவிடப்படல் வேண்டும். |
| (ஈ) | அம்புலுவாவ வளாகத்தினுள் 04 தனியார் தொலைப்பேசி நிறுவனங்களுக்கு தொலைப்பேசி ஒலிபரப்பு கூடங்களை நிர்மாணிச் நடத்திச் செல்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய ஒப்பந்தங்கள் எவையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் 03 தொலைப்பேசி நிறுவனங்களின் தொலைப்பேசி கூடங்களின் வாடனை வருமான கூட்டுத்தொகை ரூபா 1,033,000 சேர்க்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் ஒக்தோபர் 16 ஆந் திகதி பொறுப்பு சபை ஊடாக இந்த வாடகை வருமானம் திருத்தலுக்காக பெற்றுக் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையினால் ரூபா 64,000 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பு சபை கூட்ட தீர்மானங்கள் செயல்படுத்தப்பட வேண்டியதுடன் வருமானம் சேகரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்திற்கு சொந்தமான அம்புலுவாவ சுற்றுலா விடுதி மீளாய்வாண்டின் சனவரி தொடக்கம் திசெம்பர் வரையான காலத்திற்கு எந்தவொரு அறவிடல்களும் இன்றி மற்றும் ஒப்பந்தமொன்றில் உடன்படாது வெளிநபரொருவருக்கு ஒரு தங்கு விடுதியொன்று நடத்திச் செல்வதற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. பின்னர் மீளாய்வாண்டின் ஒக்தோபர் மாதம் தொடக்கம் ரூபா 55,000 ஆன மாதாந்த வாடகை அறவிடப்படுவதற்கு தீர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் ரூபா 165,000 ஆன குத்தகை கூலி அறவிடப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை செயன்முறை பின்பற்றப்பட்டு முறையான குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் நோக்கத்துடன் கையளிக்கப்பட வேண்டியதுடன் குத்தகை கூலி உரிய வகையில் அறவிடப்படல் வேண்டும். |

## 3.4 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வளாகத்தினை உருவாக்கியவரின் சிலையுடன் தொடர்புடைய நிலப்பகுதியினை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் கூறுவிலைகள் அழைக்கப்படாது அம்புலுவாவ பூங்கா சுற்றாடலில் கிரனைட் வழங்கல், பதித்தல் மற்றும் பொலிஷ் செய்தல், புதிய பூங்காவின் குளத்தின் அருகாமையில் நீர்பாய்ச்சு வழங்கி | பதில் வழங்கப்பட்டிருக்கவி-ல்லை. | கூறுவிலைகள் அழைக்கப்பட்டு ஒப்பந்தத்தில் உடன்பட்டு நிர்மாணிப்பு கையளிக்கப்பட்டு பொறியியல்/ தொழிநுட்ப உத்தியோகத்தர் அறிக்கை பிரகாரம் கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொருத்துதல், விளக்குகள் மற்றும் நில அலங்கரிப்ப்பினை நிறைவேற்றலானது 09 நபர்களுக்கு பணிக்கப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 9,805,074 செலுத்தப்பட்டிருந்தது. இந்த நிர்மாணிப்புக்களுக்குரிய மொத்த கிரய மதிப்பீடு சமர்ப்பிக்கப்படாததுடன் பொறியியலாளரொருவர் அல்லது தொழிநுட்ப உத்தியோகத்தரொருவரினால் உறுதிச் சீட்டுக்கள் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | நேரடி தொழிலாளர் அடிப்படையில் 03 நிர்மாணிப்பு செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்காக மீளாய்வாண்டினுள் மொத்தம் ரூபா 5,831,681 செலவிடப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய மொத்த கிரய மதிப்பீடு, வேலை பத்திரிகை (Job Sheet) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்கள், இருப்புக்கள் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நேரடி தொழிலாளர் அடிப்படையில் நிர்மாணிப்பு செயற்திட்டங்கள் செயல்படுத்தும் போது மொத்த கிரய மதிப்பீடு மற்றும் வேலை பத்திரிக்கை பேணிச் செல்லப்பட வேண்டியதுடன் கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்கள், இருப்பு புத்தகங்களுக்கு உள்ளடக்கப்பட்டு வழங்கப்படல் வேண்டும். |

## 3.5 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பொறுப்பு நிதியத்திற்கு சொந்தமாக காணப்படுகின்ற முகாமைத்துவ பங்கலாவிற்கு பதிலாக ரூபா 121,505 மற்றும் நூலக கட்டிடம் தலைவரின் உத்தியோகப்பூர்வ வீட்டிற்காக பயன்படுத்தும் நோக்கில் ரூபா 1,646,906 ஆன | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பு நிதியத்திற்கு சொந்தமான சொத்துக்கள் பயன்படுத்தவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | செலவொன்றினை ஏற்று பழுபார்க்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஆகஸ்ட் 31 கணக்காய்வு திகதி வரையிலும் அவை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கணக்காய்வு திகதியாகையில் ரூபா 25,400,000 ஆன புத்தகங்கள் பெறுமதியுடைய நூலகம், கெபெடேரியா இல 02 (உணவகம்), மாநாட்டு மண்டபம், சுற்றுலா விடுதி இல 02 என 04 கட்டிடங்கள் மற்றும் கிரய பெறுமதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத திரையரங்கம் மற்றும் முகாமைத்துவ இல்லம் எதிர்பார்க்கப்பட்ட ஓய்வு அறை மற்றும் 02 கடைகள் மீளாய்வாண்டிலும் எந்தவொரு பணிக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவி-ல்லை. | சொத்துக்கள் விளைவுள்ளதாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

### 3.6 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதான நுழைவாயிலின் நுழைவுச் சீட்டு வருமான பதிவேடு மற்றும் நுழைவுச் சீட்டுகள் வழங்கும் இயந்திரம் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட மாதாந்த அறிக்கை பிரகாரம் மீளாய்வாண்டில் 06 சந்தர்ப்பங்களின் போது நாளாந்தம் சேகரிக்கப்பட்ட வருமானத்தினை பார்க்கிலும் மொத்தம் ரூபா 127,140 குறைவாக வருமான பதிவேட்டில் பதியப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நாளாந்தம் சேகரிக்கப்படும் வருமானம் சரியாக புத்தகங்களில் பதியப்படல் வேண்டும். |

## 3.7 முறையற்ற நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் மொத்தம் ரூபா 3,726,540 செலினம் ஏற்று மலைப்பாங்கான இடங்கள் சமதரையாக்கப்பட்டு மண் வெட்டுதல், கல் உடைத்தமைக்காக அம்புலுவாவ சூழலின் உயிர் பல்வகைமைக்கு மற்றும் சுற்றாடல் நிலைக்கு பாதிப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. இந்த நடவடிக்கைக்காக புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பரிந்துரை மற்றும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பரிந்துரை மற்றும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாது உயிர் பல்வகைத் தன்மைக்கு தாக்கமளிக்கும் வகையில் செய்றபடல் தொடர்பில் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | டென்டர் நடைமுறை பின்பற்றப்படாது மற்றும் உழுத்துமூல ஒப்பந்தமொன்று இன்றி பொறுப்பு நிதியத்திற்கு சொந்தமான மநாநாட்டு மண்டபம் தனியார் கம்பனியொன்றிற்கு வியாபார நடவடிக்கைக்காக பெற்றுக் கொடுக்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அரச டென்டர் நடைமுறையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |